Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 262

சனிக்கிழமை
16 ஒகஸ்ட் 2025

ஆடி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சிகள் இல்லை!

கொழும்பு, ஓக. 16
எதிரணிகளை ஒன்றிணைக்கும் முயற்சி ஆட்சியைக் கவிழ்ப்பதற்குரிய சூழ்ச்சி அல்ல என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் 11

# புலிகளின் மனோநிலையில் வடக்கு மாகாண மக்கள்!



### பாதுகாப்பைக் குறைக்கக்கூடாது சரத் பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 16**

**வடமாகாணத்தில் புலிகளின் மனோநிலையில் தற்போதும் பலர் உள்ளனர். எனவே, பாதுகாப்பைத் தளர்த்தினால் அது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நிலையைத் தோற்றுவிக்கும் - இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.** 11



ஆவணிப் பெருவிழா கோலாகலம்

## மடுமாதாவின் அருள்வேண்டி பல்லாயிரம் பக்தர்கள்!

விரிவு பக்கம்:- 11

## புங்குடுதீவுப் படுகொலை; நீதிகோரிப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 16
புங்குடுதீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெட்டிக் கொல்லப்பட்ட ஐயாத்துரை அற்புதராசா (அகிலன்) என்பவரின் இறப்புக்கு நீதிகோரி, புங்குடுதீவு தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரால் 11

பருத்தித்துறையில் இருந்து

## இராணுவ முகாம்களை அகற்றுமாறு போராட்டம்

### ஒகஸ்ட் 25 முன்னெடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 16
'பருத்தித்துறை நகரைப் பாதுகாப்போம்' என்ற தொனிப் பொருளில், பருத்தித்துறை நகரில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. 11



உதயனின் ஊடக அனுசரணையில்

## சர்வதேச புத்தகத் திருவிழாவுக்கு பொதுமக்கள் பெரும் வரவேற்பு!

இன்றும், நாளையும் தொடரும்

விரிவு பக்கம்:- 11

யாழ்ப்பாணம் போதனாவின்

## சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் சுதர்சன் மறைவு



யாழ்ப்பாணம், ஓக. 16
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திரசிகிச்சை நிபுணரும், 'குழாய்வழி சத்திர சிகிச்சைகளின் இமயம்' என்று மக்களால் அழைக்கப்படுபவருமான 11

முச்சந்தி முரளி



'ரத்வத்தை குடும்பத்தை தமிழ்ச்சனத்தின்ர சாபம் சும்மா விடேலை கண்டியளோ'

## அரகலய வழக்குகளை நீக்குவதற்குத் திட்டம்!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 16
அரகலய மக்கள் போராட்டத்துடன் தொடர்புபட்ட வழக்குகளை சட்டபூர்வமாக நீக்கிக்கொள்வது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது என்று இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் பிரதி அமைச்சராக 11

நல்லூர்

## விசேட உற்சவங்களை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதியுச்சம்

### கொழும்பிலிருந்து வந்தது விசேட அணி

யாழ்ப்பாணம், ஓக. 16
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் விசேட உற்சவங்கள் இடம்பெறவுள்ள நிலையில், அவற்றைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புக் கடமைகளுக்காக கொழும்பிலிருந்தும் விசேட அணி வரவழைக்கப்பட்டுள்ளது - இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.பி. எஸ்.ஜெயமகா 11

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 16
யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்குப் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் படுக்கையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சிவனாதன் சிவனேசன் (வயது-52) என்ற குடும் 11

மீசாலை கிழக்குப் பகுதியில்

## கிணற்றுக்குள் இருந்து சடலமொன்று மீட்பு!

சாவகச்சேரி, ஓக. 16
மீசாலை கிழக்குப் பகுதியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கோ.வேலுப்பிள்ளை (வயது-70) என்பவரே இவ்வாறு சடலமாக 11

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த காலமானார்!

### தமிழ் அரசியற்கைதிகளை துப்பாக்கியால் அச்சுறுத்தியவர்

கொழும்பு, ஓக. 16
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான லொகான் ரத்வத்த (வயது-57) உடல் சுகவீனம் காரணமாக நேற்றுக் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 | திகதி 15.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4164 | சீட்டிழுப்பு இலக்கம் 1231 | சீட்டிழுப்பு இலக்கம் 0190 | சீட்டிழுப்பு இலக்கம் 2270 | சீட்டிழுப்பு இலக்கம் 5922 | சீட்டிழுப்பு இலக்கம் 1952 | சீட்டிழுப்பு இலக்கம் 0497 | சீட்டிழுப்பு இலக்கம் 0038 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் சிம்மம் | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கினம் கடகம் |
| | | | சுப்பர் இலக்கம் 15 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 21 36 46 53 | வெற்றி இலக்கங்கள் 02 11 39 49 | வெற்றி இலக்கங்கள் 1 3 9 3 | வெற்றி இலக்கங்கள் 52 62 63 77 | வெற்றி இலக்கங்கள் 1 8 2 1 8 9 | வெற்றி இலக்கங்கள் 11 21 47 50 | வெற்றி இலக்கங்கள் 2 1 8 9 | வெற்றி இலக்கங்கள் 28 29 41 52 |
| விசேட எழுத்து H | | | | | விசேட எழுத்து B | | |

# நாட்டைப் பாதுகாப்பதற்கு சட்டம் கடுமையாக்கப்படும்

## புதிய பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு




**கொழும்பு, ஓக. 16**

**இலங்கையில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்காக சட்டங்களை மேலும் கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.**

நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதாளக் குழுக்களுக்கு கடந்த காலங்களில் அரசியற்பாதுகாப்புக் கிடைக்கப்பெற்றுவந்தது. தற்போது அந்நிலைமை மாறியுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களின்கீழ் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான சிறப்புச் சோதனைகளைத் தொடரமுடியாது. குற்றங்கள் மற்றும் ஊழலில் ஈடுபடுவதைத் தடுக்கப் புதிய சட்டங்கள் தேவை.

குற்றவாளிகள் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று, இங்கு குற்றங்களை வழிநடத்துகின்றனர். அந்தத்தரப்பினருக்கு இதற்கு முன்னர் கிடைக்கப்பெற்றுவந்த அரசியற்பாதுகாப்பு தற்போது கிடைப்பதில்லை.

ஆயுதப் படைகளிலிருந்து தப்பிச்சென்ற சிலரும், பொலிஸிலுள்ள சிலரும் போதைப் பொருள் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

முதற்படியாக, பொலிஸ்துறையைச் சுத்தப்படுத்தும் பணி தொடங்கும். அதன்பிறகு சமூகம் மீது கவனம் செலுத்தப்படும். குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள்மீது ஒழுங்கு மற்றும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்படுவார்கள் - என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0630 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 1 7 8 5 3 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2896 | ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 21 61 63 75 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 19 50 63 73 | வெற்றி வாரம் 5057 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| வெற்றி வாரம் 0748 | வெற்றி இலக்கம் 02 23 31 | |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| விருட்சிகம் ♏ | வெற்றி இலக்கம் 18 22 36 60 | சீட்டிழுப்பு வாரம் 4608 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து S | சுப்பர் இலக்கம் 39 | வெற்றி இலக்கம் 23 37 52 73 | வெற்றி வாரம் 2072 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 15.08.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 30 43 57 75 | வெற்றி வாரம் 2722 |



# ராஜிதவின் சொத்துகள் முடக்கம்

கொழும்பு, ஓக.16

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்து தலைமறைவாக இருந்தால் அவரது சொத்துகளைப் பறிமுதல் செய்வதில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு பெறப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் தலைமறைவாக இருந்துவரும்நிலையில் அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வுத்திட்டத்தினூடாக அரசாங்கத்துக்கு ரூ.26 மில்லியனுக்கும் அதிகமான நிதி இழப்பை ஏற்படுத்தினாரென ராஜித சேனாரத்னமீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# காற்றாலைத் திட்டம் மன்னாருக்கு அழிவு

## போராட்டத்துக்கு தமிழரசு ஆதரவு
## சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு



மன்னார், ஓக.16

மன்னாரில் மக்களின் வாழ்வியலைப் பாதிக்கும் காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு போன்றவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற போராட்டத்துக்கு இலங்கை தமிழரசுக் கட்சி பூரண ஆதரவை வழங்கும் என அந்தக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின்கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் தொடர்ச்சியாக மன்னார் பஜார்ப் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் 12ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு ஆகியவை தொடருமானால் மன்னார் பிரதேசத்தினுடைய வாழ்வியல் சூழல் மிகவும் பாதிக்கப்படும். தற்போது இடம்பெற்றுவருகின்ற போராட்டம் அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் இடம்பெற்றுவருகின்றது.

மீளாய்வின் அடிப்படையில் மக்களின் கோரிக்கைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, இயற்கையுடன் கூடிய மன்னார் அழிவிலிருந்து பாதுகாக்க அரசாங்கம் உரிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அந்தவகையிலே மக்களினுடைய போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சி முழுமையான ஆதரவை வழங்கும்- என்றார். (ச-56)



## 4 தசாப்தங்களின் பின்னர்
# புத்துயிர்பெறும் நாடாளுமன்றம்

கொழும்பு, ஓக.16

அமைச்சரவையின் அனுமதியின்கீழ் 42 வருடங்களுக்குப் பின்னர் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவின் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கை நாடாளுமன்றத்தில் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியின் கொன்கிரீட் மேல்தளம்மீது காணப்படும் மண் அகற்றப்பட்டு திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அதுமாத்திரமன்றி கூரைகளின் பீலிகள், செப்புக் கதவு, நாடாளுமன்ற மருத்துவ நிலையம், கழிவறைக் கட்டமைப்பு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அணி அறை ஆகியவற்றிலும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம் ஒழுங்கமைத்து நடாத்தும்
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா -2025
Jaffna International Book Festival - 2025
AUGUST 15 16 17 10:00 am to 08:30 pm
யாழ்ப்பாண திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில்
அச்சு ஊடக அனுசரணை
உதயன்
மேலதிக விபரங்களுக்கு
CCIY உடன் தொடர்பு கொள்ளவும்
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
No 63- NALLUR CROSS ROAD, NALLUR, JAFFNA | info@cciy.lk | 021 222 6608 / 070 366 3603

## அருங்காட்சியகங்கள் திங்களில் திறக்காது!

கொழும்பு தேசிய அருங்காட்சியகம் உட்பட நாட்டிலுள்ள ஏனைய பிராந்திய அருங்காட்சியகங்கள் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் மூடப்படும் எனத் தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மூடல் பராமரிப்புப் பணிகளுக்காக மேற்கொள்ளப்படுவதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)




## ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.16

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று சனிக்கிழமை பத்தொன்பதாவது நாளாக இடம்பெறவுள்ளது.

இன்று இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் த்வத்திரு.வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு 'பொறுமையால் அகந்தையை அழித்திடுவோம்!' எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-66)


# சமயத் தலைவர்களின் மொழிப்புலமை விருத்தி

### *யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்*

யாழ்ப்பாணம், ஓக.16

சமயத் தலைவர்களின் மொழிப்புலமையை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்ட ஆரம்பக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது. யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சமயத் தலைவர்களின் (இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம்) சிங்கள மொழிப்புலமையை விருத்தி செய்து அதன் ஊடாக நல்லிணக்கத்தை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நந்தன கெட்டியாராய்ச்சி, ஆணையாளர் எம்.எஸ்.ஜெயவீர மற்றும் கண்காணிப்பாளர் லசித் நலந்த, அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி மாதவி குணரட்ண, அரச கரும மொழியின் உத்தியோகத்தர்கள், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர், சமயத் தலைவர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கலந்துரையாடலில் வளவாளர்களாக ஸ்ரீரஞ்சன், சுனில் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-66)



# ரூ.10 இலட்சத்துக்கு ஏலம்போன மாம்பழம்

யாழ்ப்பாணம், ஓக.16

வடமராட்சி நாகர்கோவில் வடக்கு முருகையா தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் மாம்பழத் திருவிழாவில் மாம்பழம் ஒன்று 10 இலட்சம் ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த எட்டாம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றுவரும் நிலையில் ஏழாம் திருவிழாவான மாம்பழத் திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

அன்று இரவு முருகனுக்கும் விநாயகப் பெருமானிற்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் உலகைச் சுற்றி முதலில் வலம் வருபவருக்கே மாம்பழம் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து முருகப்பெருமான் மயில் ஏறி உலகைச் சுற்றச் செல்ல விநாயகப் பெருமான் பெற்றோரான சிவனையும் உமாதேவியாரையும் வலம்வந்து மாம்பழத்தைப் பெற்றுக்கொண்டார். சரித்திரத்தைப் பிரதிபலிக்கும் நாடகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாம்பழம் ஏலம் கூறப்பட்டது. இதில் பத்தாயிரம் ரூபாவுக்கு மாம்பழம் முதலில் ஏலம் கூறப்பட்டு சில நொடிகளில் ஆறு இலட்சம் ரூபா வரையில் சென்று பின்னர் படிப்படியாக உயர்ந்து சில நிமிடங்களில் 10 இலட்சம் ரூபாவுக்கு இறுதியாக ஏலம் போனது. (ச-100)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கிராம ஊர்வலம் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது அலங்கரிக்கப்பட்ட சிறிய உழவு இயந்திரத்தில் விநாயகப் பெருமான் கிராமம் முழுவதும் வீதி உலா வந்தார். (ச-66)




## நல்லை நகர் நாயகனே நல்லருள் தாராயோ

நல்லை நகர் நாயகனே
வள்ளி அம்மை மணாளனே
உன் அழகுக்கோலம் கண்டுகொண்டேன்
எமக்கு நல்லருள் தாராயோ

வெள்ளி மயிலேறி தினம் அருள்புரிபவனே
உமை அம்மை பெற்ற பாலகனே
உன் அழகு வதனம் கண்டுகொண்டேன்
எமக்கு நல்ல வரம் தாராயோ

மஞ்சத்தில் திருவீதி வரும் தமிழ் அழகா
அடியவர் குறைபோக்கும் முருகா
வள்ளி தெய்வானையுடன் திருக்கோலம்
கண்டுகொண்டேன்
எம் குறைகள் களைந்திடுவாயோ

நல்லை நகர் முருகா என்றதுமே
உன் புகழ் நித்தமும் பாடுதே வையகம் உனது
மயில் மீது அழகு வேலைக் கண்டுகொண்டேன்
எமக்கு நல்ல வாழ்வு தாராயோ

முருகா! முருகா! முருகா!

**நாகலிங்கம் தங்கவேல்**
**மட்டுவில்**

## நல்வழிகாட்டு கார்த்திகேயா

திருக்கார்த்திகை திருநாள்தனில்
பச்சைமாமயில் மீது
வள்ளி தெய்வானையுடன்
பவனிவரும் பாலமுருகா
மாவிளக்கிட்டு மனம்நெகிழ
பக்தர்கள் பாடும் பாவினை
கேள் பரமதயாளா..
நல்லையம்பதி நல்லைக்குமரா
நல்வழிகாட்டு கார்த்திகேயா

**நல்லை ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைக் காலையிலேயே தொடங்கி விடுவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிச்சுமை சற்று அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. மகிழ்ச்சியுடன் ஆதாயமும்தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** உடல்நலனில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் குறைவாகவே கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** ஆதாயகரமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.





# உயிராபத்தை உண்டாக்கும் அராலி 789 வழித்தட வீதி!

## மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 16

அராலி பாலத்தில் இருந்து அராலி அம்மன் கோவில் நோக்கி செல்லும் 789 பேருந்து வழித்தட வீதியிலுள்ள மதகு உயிர் ஆபத்தை ஏற்படுத்தும்வகையில் காணப்படுகிறது. இதனை உடன் சீரமைத்துத் தரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியால் தினமும் அதிகளவான மக்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இந்த மதகு சேதமடைந்திருந்த நிலையில் திருத்தம்செய்யப்பட்டது. எனினும் திருத்த வேலைகள் தரமற்று இடம்பெற்றதால் மீண்டும் அதே பகுதியில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்த வீதியால் பயணிப்போர் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறித்த வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதியாகக் காணப்படும்நிலையில் விரைந்து குறித்த மதகைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-27)

# கூரையிலிருந்து தவறி வீழ்ந்து இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக.16

வீட்டுக்கூரையைச் சரிசெய்வதற்கு மேலேறிய இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கோப்பாய் அம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது. இளைஞரின் தலையில் பலமான காயமும், இடுப்பு முள்ளந்தண்டில் பலமான வெடிப்பும் ஏற்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-41-131)

# கலைநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.16

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் கலாசாரக் கலைக் கழகத்தினரால் நடத்தப்பட்ட கலைநிகழ்வுகள் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. சனசமூக நிலையத் தலைவர் ந.காந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கவிதை அரங்கு, பாடல், நாடகம், பேச்சு என்பன இடம்பெற்றன. (ச-41-131)



# காரைநகரில் சிறப்புற்ற பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.16

காரைநகர் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காரைநகரில் இடம்பெற்றது.

பண்பாட்டுப் பெருவிழாவைப் பிரதிபலிக்கும் வகையில் ஊர்திகள் பவனி வந்ததுடன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-17)

# சட்டவிரோத குழாய்க்கிணறுகள் வலி. மேற்கில் அமைக்கத் தடை

யாழ்ப்பாணம், ஓக.16

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில், பிரதேசசபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் ச.ஜயந்தன் அறிவித்துள்ளார்.

பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் ஈடுபடும் இயந்திரம், பொறித்தொகுதிகள் என்பன வலிகாமம் மேற்குப் பிரதேசசபையில் பதிவு செய்திருத்தல் கட்டாயம்.

இந்த நடைமுறைகளைமீறி குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் ஈடுபடின் ஆதன உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தினூடாகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-25)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மக்களின் பிரதிநிதித்துவம் மாகாணசபைகளில் முடக்கம்

## தேர்தலை உடன் நடத்துமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

**கொழும்பு, ஓக.16**

**ஆட்சி நிர்வாகம் எனும் வாகனத்தில் மூன்று சக்கரங்கள் உரியவாறு செயற்பட்டாலும், நான்காவது சக்கரமான மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதித்துவம் தடைப்பட்டுள்ளது. அதன் விளைவாக குறிப்பாக வடக்கு-கிழக்கு மக்களால் ஆட்சி நிர்வாகத்தில் உரியவாறான பிரதிநிதித்துவத்தை வழங்கமுடியாதிருப்பது அநீதியாகும். எனவே எந்தவொரு அரசியல் நலனுக்கும் அப்பாற்பட்டு, மாகாணசபைகளை உடனடியாக இயங்கச்செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையின் விளைவாக இலங்கை உள்ளடங்கலாக உலகின் பல நாடுகள் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளன.

ஏற்றுமதித்துறை குறிப்பிடத்தக்களவு விரிவடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இருப்பினும் தற்போது நிலவும் மட்டத்தை விடவும் ஏற்றுமதிகள் மேலும் அதிகரிக்கவேண்டும். உள்ளூராட்சிமன்றங்கள் இயங்க ஆரம்பித்ததன் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் மாகாணசபைகள் இயங்காததன் விளைவாக இடைவெளி ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக சுமார் 11 ஆண்டுகளாக பல பிரதான அபிவிருத்தித்திட்டங்கள் பின்னடைவைச் சந்தித்துள்ளன. மாகாணங்களுக்கான ஆளுநர்களால் மாத்திரம் இதனைச் செய்யமுடியாது.

ஆட்சி நிர்வாகம் எனும் வாகனத்தில் மூன்று சக்கரங்கள் உரியவாறு செயற்பட்டாலும், நான்காவது சக்கரமான மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதித்துவம் தடைப்பட்டுள்ளது.

எனவே எந்தவொரு அரசியல் நலனுக்கும் அப்பாற்பட்டு, மாகாணசபைகளை உடனடியாக இயங்கச்செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்- என்றுள்ளது. (ச-இ)

# வாவியிலிருந்து 7,000 தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு, ஓக.16

அநுராதபுரம் கெடலாவ வாவியில் இருந்து தானியங்கித் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 7ஆயிரத்துக்கும் மேற்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாக கலென் பிந்துனுவெவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயலில் இருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு விவசாயி ஒருவர் தனது கால்களைக் கழுவுவதற்காக குறித்த வாவிக்குச் சென்றபோது நீருக்குள் பல தோட்டாக்கள் இருப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த இடத்தில் விசேட பொலிஸ் குழுவினர் மேலதிக சோதனைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# ஓகஸ்ட் மாத அஸ்வெசும விநியோகம்

கொழும்பு, ஓக.16

ஓகஸ்ட் மாதத்திற்கான அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு நேற்று முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக அஸ்வெசும நலன்புரிச் சபை அறிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக ரூ.11.2 பில்லியனுக்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் பயனாளிகள் வங்கிக் கணக்குகளிலிருந்து நிதியை இன்றுமுதல் பெறமுடியும் என்று நலன்புரிச்சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# ரயிலுடன் மோதுண்டு ஒருவர் பலி



கொழும்பு, ஓக.16

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிச் சென்ற கடுகதி ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவில் கொழும்பு பெலியத்த ரயில் மார்க்கத்தின் 23ஆவது மைல்கல் அருகே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது. (ச-இ)



# நல்லூர்க் கந்தன் நோக்கி வேல் தாங்கிய நடைபாதை

## வவுனியாவில் ஆரம்பம்

வவுனியா, ஓக.16

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் விசுவாவசு வருடப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து வருடம்தோறும் முன்னெடுக்கப்படும் வேல்தாங்கிய நடைபாத யாத்திரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது.

இந்த யாத்திரை வவுனியா மன்னார் வீதி ஊடாக வவுனியா நகரை அடைந்து ஏ-9 பிரதான வீதி வழியாக 128 வரையான இந்து ஆலயங்களைத் தரிசித்தவாறு நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழா நாளான எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை நல்லூர்க் கந்தன் ஆலயத்தை வந்தடையும். (ச-66)

# கடவுளும் டாக்குத்தரும்

"காய்ஞ்சுபோன பூமியெல்லாம் வத்தாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும். ஆனால் அந்த நதியே காய்ஞ்சு போயிட்டா....?" இப்பிடியொரு வசனம், சோதனைமேல் சோதனை எண்ட பழைய பாட்டில வரும். நேற்றொரு செத்தவீட்டுச் செய்தியைக் கேட்டதும் இந்தப் பாட்டுத்தான் நினைவுக்கு வந்தது. எத்தினையோ பேருக்கு வந்த வருத்தங்களை மாத்தி, கைராசிக்கார டொக்டர் எண்டு பேரெடுத்த டொக்டர் சுதர்சன் ஹார்ட் அட்டாக்கில செத்திட்டார் எண்ட செய்தியை கனபேரால தாங்கிக்கொள்ள முடியேலை. சாதாரண ஆக்கள் இப்பிடி ஹார்ட் அட்டாக்கில சாகிறதைக் கேள்விப்பட்டிருக்கிறம். ஆனால் இப்பிடி ஒரு பேமஸான டொக்டர், திடீரெண்டு சாவார் எண்டு ஆருமே நினைச்சும் பாக்கேலை.

டொக்டர் சுதர்சன் கைராசிக்கார டாக்குத்தர் எண்டு சனமெல்லாம் அவரிட்ட போறதுக்குக் காரணம், அவரின்ர கதைதான். சில டாக்குத்தர்மார் பெரியாஸ்பத்திரியில வெடுசுடு எண்டும், பிரைவேட் ஆஸ்பத்திரியளில வெல்லக்கட்டி மாதிரியும் நடந்துகொள்ளுவினம். ஆனால் இவர் அப்பிடியில்லை. எப்பவும் எல்லாரோடையும் எங்கையும் வாஞ்சையோடதான் கதைப்பார். ஆக்களின்ர வருத்தத்தைப் பெரிய பூதம் மாதிரிக் காட்டிப் பயப்பிடுத்தாமல் 'இதெல்லாம் சின்னவிசயம். கனபேருக்கு இப்பிடி நடந்து மாத்தியிருக்கினம்' எண்டு அவர் அக்கறையாச் சொல்லிற சொல்லிலையே, மருந்து போடாமலேயே வருத்தமெல்லாம் மாறினமாதிரி இருக்கும். ரண்டு, மூண்டு தரம் போனால் அவர் அந்த வருத்தக்கார ஆக்களின்ர குடும்பத்தில ஒருத்தர்மாதிரி பழகத்தொடங்கிடுவார். அவையின்ர சுகதுக்கம் எல்லாம் விசாரிச்சு, தன்ர நன்மை தீமையெல்லாம் சொல்லி, நெருக்கமாகிடுவார். அதால வேற வருத்தங்கள் வந்தாலும் 'காட்டினால் சுதர்சன் டாக்குத்தரிட்டதான் காட்டுவம்' எண்டு வருத்தக்காரர் அடம்பிடிக்கிற சம்பவங்களும் நடந்திருக்கு. அவையளையும் கூப்பிட்டு 'ஐயா, இந்த வருத்தம் பாக்கிறதில எனக்கு அனுபவம் இல்லை. இதுக்கெண்டு ஸ்பெசலிஸ்ட் இருக்கினம். அவையிட்ட காட்டினாத்தான் மாறும்' எண்டு அவையின்ர பிள்ளைமாதிரிப் போய் அட்வைஸ் செய்து, தானே அந்த ஸ்பெசலிஸ்ட் டாக்குதரிட்டக் கொண்டுபோயும் விட்டிருக்கிறார். அப்பிடி அவர் கொஞ்சம் வித்தியாசமான, சனங்களுக்குப் பிடிச்ச டாக்குத்தர்.

நேற்றும் செமினார் ஒண்டுக்கு ஜெயவர்த்தனபுர கம்பஸூக்குப் போயிருக்கிறார். மூண்டாம் மாடியிலதான் செமினார். அதுக்கு லிப்ட்டில போகாமல், மூண்டு மாடியும் படியேறிப்போய்த்தான் இருந்திருக்கிறார். செமினாரில இருக்கேக்க, அவருக்கு மூச்சிரைச்சு, கடுமையா வேர்க்கத் தொடங்கியிருக்கு. மற்றவை என்ன இப்பிடி மூச்சிரைக்குது? எண்டு கேக்க, 'அது படியேறி வந்ததால அப்பிடி' எண்டு சொல்லி இருக்கிறார். ஆனால் கொஞ்சநேரத்திலயே அவர் நெஞ்சைப் பிடிச்சபடி மயங்கிவிழுந்திட்டார். உடனேயே அவருக்குக் கடும் ட்ரீட்மெண்ட் செய்தும், அவரைக் காப்பாத்த முடியேலை. என்ன வருத்தம் வந்தாலும் 'சுதர்சன் டொக்டர் இருக்கிறார்' எண்ட நம்பிக்கை கனபேருக்கு இருந்தது. அவைக்கெல்லாம் அவர் ஒரு கடவுள்மாதிரி. இனி அந்தக் கடவுள் அவைக்கு இல்லையெண்டதை எப்பிடித் தாங்கப்போயினம்?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதிகாரியாகச் செயற்படுபவர் கதவடைப்புக்கு அழைப்பது தகுமா?

## ஐக்கிய தமிழர் ஒன்றியம் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக.16

தமிழரசுக்கட்சி கடந்த பல தசாப்தங்களாக தமிழ்மக்களைப் பகடைக்காய்களாக்கி, வாக்கு வேட்டையாடிவருகின்றது. அரசியலில் பின்கதவால் புகுந்தவர்- மக்களாணையைப் பெறாதவர் - ஒரு சர்வதிகாரியாக இருப்பவர் விடுத்துள்ள ஹர்த்தால் அழைப்பு நியாயமானதா? என்று ஐக்கிய தமிழர் ஒன்றியம் கேள்வியெழுப்பியுள்ளது.

இதுதொடர்பில் அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

இது அவரின் தனிப்பட்ட தீர்மானமா? கட்சித் தீர்மானமா? என்பதை ஆதாரத்துடன் அவர் வெளிப்படுத்தவேண்டும்.

அரசின் அடக்குமுறைகள் இராணுவத்தின்மூலம் இடம்பெற்றவேளை பொங்கியெழாத- போராட வராத அவர் இராணுவத்தினரால் சித்திரைவதைக்குள்ளாகி இளைஞரொருவர் உயிரிழந்தாரெனக் கூறப்படும் சம்பவத்துக்கெதிராக போராட அழைப்பு விட்டதன் பின்னணி என்ன?

நல்லாட்சி அரசின் காலத்தில் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புடன் தமிழ் மக்கள் மத்தியில் பவனிவந்தபோது, இராணுவக்கெடுபிடிகளினால் தமிழ் இளைஞர்கள் சொல்லொனாத் துன்பத்தை அனுபவித்தபோது எழாத சீற்றம் இப்போது எழுந்து ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருப்பதேன்? இது சந்தர்ப்பவாத, தமிழ் மக்கள் தலையில் மிளகாய் அரைக்கும் அரசியல்.

எனவே தமிழ்த்தேசிய மக்கள் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். தமிழ்தேசியத்துக்கு எதிரான, துரோகிகளுக்குத் துணைபோகக்கூடாது- என்றுள்ளது. (ச-25)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 03 . 1949

மறைவு 03 . 09 . 2018

எம்மையே நினைத்து எமக்காகவே வாழ்ந்த
அன்புத் தெய்வம் அப்பா!

**அமரர் இளையவி சின்னராசா**

(ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அப்பாவே-நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ-ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில் சுடர் விட்டுக்
கொண்டிருக்கும்
குலவிளக்கே அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகள்
சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப்
பிரியாது
இன்று (16.08.2025) சனிக்கிழமை அவரது
இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து
கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

39, அரசடி வீதி,
5 ஆம் ஒழுங்கை, நல்லூர்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 59118) E



## பெயர் மாற்றம்

இன்பர்சிட்டி பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை ருஜினி என்கின்ற எனது முதற்பெயரை அந்தோனிப்பிள்ளை றெஜினா என மாற்றம் செய்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்

உண்மையுள்ள,
அ.றெஜினா

(CS 30460) E



## மேசன் வேலையாட்கள் தேவை

கட்டிட நிர்மாண
வேலையொன்றிற்கு 2 மேசன்
வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு:
**077 825 6334**

(CS 59114) E



## விற்பனைக்கு

- 5' உயரமுள்ள இந்தியன் குத்துவிளக்கு 1 சோடி - 210,000/-
- LG Washing Mechine 9.0 Kg Full Automatic - 40,000/-
- கமரா D 5500 Nikon + Extra Zoom Lence - 105,000/-
- C.C.T.V 16 CH Ricever. H.264 XVR + 16 Waves Camera - 40,000/-
- Computer Acer Nitro - Intel i7 - 130,000{-
- Digital Projector - ES 500 BeNQ, JACKS water Pumb TV INOVEX - 32", Gold Star LED 50W
- 6'X4 1/2' அடி நாய்க் கூடு - 50,000/-
- அவசர தேவையின் பொருட்டு மலிவு விலையில் விற்பனைக்கு.
- சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் காலை 9.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
**071 803 4182** ஊரும்பிராய்


## பழ.நெடுமாறனின் நூல் அறிமுகம்

புதுச்சேரி, ஓக.16

பழ.நெடுமாறன் எழுதிய 'ராஜீவ்காந்தி கொலை வழக்கு தூக்குமேடையில் இருந்து 26 தமிழர் மீட்பு' நூல் அறிமுக விழா புதுச்சேரி தமிழர் தேசிய முன்னணித் தலைவர் தமிழ்மாமணி துரை. மாலிறையன் தலைமையில் புதுச்சேரி தமிழ்ச்சங்க அரங்கத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் மு.சந்திரன் நூலாய்வுரையையும் நூல் ஆசிரியர் பழ. நெடுமாறன் ஏற்புரையையும் நிகழ்த்தவுள்ளனர். (ச-100)


## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 07 . 1940

மறைவு 16 . 08 . 2010

**அமரர் தர்மலிங்கம் தர்மராஜா**

(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர் - வவுனியா)

திதி: 31.07.2025

அப்பா, பதினைந்து நெடிய ஆண்டுகள் கடந்தாலும்
பற்றுக்கள் அறுந்து நீங்கள் பரனுலகம் புகுந்த நாள்
எம் நினைவு விட்டு என்றுமே மறையாது...

அப்பா, உங்கள் ஆத்ம சாந்திக்காக தினம்
உருகி வேண்டுகின்றோம் - நாங்கள்
உங்கள் கனவுகளை நனவாக்க போராடி நிற்கின்றோம்.

எம் வாழ்வை வாழ்வதற்கு வழிகாட்டிச் சென்றீர்கள் அப்பா - இங்கு
நீங்கள் இல்லா வாழ்க்கையும் வலியுடனே வாழ்கின்றோம் நாம்

உங்கள் ஆத்மா சாந்தி பெற நெட்டிலிப்பாய்
பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அப்பிளானை
கோப்பாய் மத்தி, கோப்பாய்

குடும்பத்தினர்

(CS 30331) E



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09 . 12 . 1949

விண்ணில் 16 . 08 . 2020

**அன்னலட்சுமி செல்வநாயகம்**

ஆண்டுகள் ஐந்து கடந்து போயாயிற்று...
ஆனாலும் ஒவ்வொரு மணித்துளியிலும்...
ஏதாவது ஒன்று உன்னை
ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கிறது.
அந்த ஞாபகங்கள் கவலைகள் தாண்டி ...
ஓர் ஆத்ம அமைதியக் கொடுக்கிறது.
வானமாய்... மேகமாய்...
காற்றாய்... கடலாய்...
பூக்களாய்... புற்களாய்...
மழையாய்... மரங்களாய்...
யாதுமாகி நிற்கிறாய் நீ!
எனில் பிரிவொன்றுமிலை!

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நீங்கள் உறங்கும்போது வருவது அல்ல கனவு,
உங்களை உறங்கவிடாமல் செய்வதே கனவு.

– அப்துல்கலாம்–


## எல்லாம் இருந்தும் ஏதிலிகளாக...!

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது விவசாய நிலங்கள், காணிகள் என்பன உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரியிருக்கின்றனர் காணிகளின் உரிமையாளர்கள். சொந்தக் காணிகளை இழந்து ஏதிலிகளாகவும் - தினக்கூலிகளாகவும் தாம் அந்தரித்துத் திரிகையில், தமது காணிகளை ஆக்கிரமித்து வைத்துள்ள இராணுவம் விவசாயம் செய்தும், பண்ணைகளை அமைத்தும் பணம் பார்ப்பது எவ்வகையில் நியாயம் என்றும் வெதும்பியிருக்கின்றனர் அவர்கள்.

வலிகாமம் வடக்கில் மக்களின் பல நூறு ஏக்கர் விவசாயக்காணிகள், குடியிருப்புகள் என்பன தொடர்ந்தும் இராணுவத்தினரிடம் உள்ளன. 30 ஆண்டுகளாக தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக வாழும் மக்கள், தமது நிலங்களில் மீண்டும் தம்மைக் குடியமர்த்தவேண்டும் என்று கடந்த 16 ஆண்டுகளாகப் போராட்டங்களை மேற்கொண்டுவருகின்றனர். எனினும் எந்தப் பயனும் இல்லை. ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தில்கூட இந்த விடுவிப்பு முழுவதுமாகச் சாத்தியப்படவில்லை. 'உயர்பாதுகாப்பு வலயம்' என்ற ஒற்றைச்சொல்லுக்குள் மக்களின் கனவுகளும் எதிர்காலமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன - இன்றும் அதுவே நடந்துகொண்டிருக்கின்றது.வலிகாமம் வடக்குக்கு 'பொன் கொழிக்கும் பூமி' என்றும் பெயர். எதை விதைத்தாலும் அதை விளைவிக்கும் மண் என்பதால் அத்தகைய பெயர்கொண்டு அதனை அழைப்பர். வலி.வடக்கு மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் விவசாயம்தான். இவ்வாறிருக்கையில் அவர்களின் பொருளாதாரத்தை - வாழ்வின் பெரும் பலத்தை பறித்தெடுத்து, மக்களின் வயிற்றைப் பசியால் நிரப்பிக் காசாக்குவதென்பது உச்சக்கட்ட வஞ்சமே அன்றி வேறில்லை.

போரால் சிதைந்த வலிகாமம் வடக்கு மக்களின் பொருளாதாரம் மீண்டும் புத்துயிர்ப்புப் பெறுவதற்கு இந்த விவசாயபூமி முதுகெலும்பு போன்றது. அதை உரியமுறையில் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு அரசு இதயசுத்தியுடன் நடவடிக்கைளை மேற்கொள்ளவேண்டும். விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர், நாட்டிலிருந்து பயங்கரவாதம் முழுமையாகத் துடைத்தெறியப்பட்டுவிட்டது என்றெல்லாம் வாய்ச்சவடால் விடும் அரசுகள், இல்லாத பயங்கரவாதத்தில் எதற்காக உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் காணிகளைப் பறித்துவைத்திருக்கவேண்டும்? இராணுவத்தின் வேலை நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே தவிர விவசாயம் செய்வதல்ல. அதிலும் பொதுமக்களின் காணிகளை அடாத்தாக கபளீகரம் செய்து மேற்கொள்ளும் விவசாயத்தை இராணுவத்தினருக்கு உகந்த நடவடிக்கையாகக் கொள்ளமுடியாது. விவசாயம் செய்வதையும் அதன்மூலம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதையும் இராணுவம் விரும்புகின்றதெனில் அதற்கு அரச காணிகள் ஏராளமானவை உள்ளன. தேடுவாரற்று ஏராளமான கட்டாந்தரைகள் உள்ளன. நாட்டின் தெற்குப் பகுதிகளில் இன்னும் விசாலமான அரச காணிகள் உள்ளன. அவற்றையெல்லாம் விட்டுவிட்டு வலிகாமம் வடக்கில் - தமிழர்களின் காணிகளில் எதற்காக இந்த ஓரவஞ்சனை?. தமிழர்கள்மீது தற்போது மேற்கொண்டுவரும் பொருளாதாரத் தாக்குதல்களை ஸ்ரீலங்கா இராணுவம் கைவிட வேண்டும். அதுவே நாட்டின் மீட்சிக்கும் வழி வகுக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## ஊழல், மோசடியாளர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவர்



### அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.16**

**ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட கொள்ளையர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என உறுதியளித்தோம். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுவருகின்றது என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வரவு- செலவுத் திட்டத்திலும் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடமும் அதிகரிப்பு இடம்பெறும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுதான் சவாலாக உள்ளது. அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் போதாது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு பெருந்தோட்ட அமைச்சு, நிதி அமைச்சு என்பன உரிய தலையீடுகளை மேற்கொண்டுவருகின்றன.

சம்பள உயர்வை விரைந்து பெற்றுக்கொடுக்கமுடியாமை தொடர்பில் கவலையடைகின்றோம். எனினும்,நாம்அதற்குரியபோராட்டத்தைக் கைவிடவில்லை. நிச்சயம் உறுதிமொழியை நிறைவேற்றுவோம். அடுத்த சில மாதங்களில் இந்தப் பிரச்சினை தீரும்-என்றார். (எ-44)

## இலங்கை வருகின்றது அமெரிக்க போர்க்கப்பல்



கொழும்பு, ஓக.16

அமெரிக்கப் போர்க் கப்பலான யு.எஸ்.எஸ்.சான்டா பாப்ரா இன்று இலங்கைத் துறைமுகத்துக்கு வரவுள்ளது. இந்தக் கப்பல் கரைக்கு அருகிலுள்ள கடற்பகுதியில் செயற்படும் சுயாதீன மாற்றுரு போர்க் கப்பலாகும். இந்தக் கப்பல் இலங்கைக்கு வரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (எ-இ)

## கீரிச் சம்பாவுக்கு செயற்கைத் தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக.16

நாட்டில் கீரிச் சம்பா அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். தட்டுப்பாட்டை நீக்க அரிசி இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கீரிச் சம்பாவுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தச் சிலர் முனைகின்றார்கள். பொலநறுவை களஞ்சியசாலைகளில் 85 ஆயிரம் மெட்ரிக்தொன் கீரிச் சம்பா உள்ளது. அதில் ஒரு தொகையை சந்தைக்கு விடுவித்தால் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம். இல்லையெனில், வெளிநாடுகளில் இருந்து கீரிச் சம்பாவை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## சுற்றிவளைப்பில் 4,712 பேர் கைது

கொழும்பு, ஓக.16

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 4 ஆயிரத்து 712 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸார், இராணுவம், விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)



## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.16

மினுவாங்கொடவில் ரி-56 ரகத் துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் இருந்து தோட்டாக்கள், ஒரு கைத்துப்பாக்கி மற்றும் மகசின், வாள்கள், கத்திகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை - ஆவணி 01

17.08.2025


சுபநேரம் : 09.05 - 10.35

ராகுகாலம் : 04.35 - 06.05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 08 . 1973



மறைவு
15 . 08 . 2025

## சிவநாதன் சிவநேசன்

பிரபல ஆங்கில ஆசிரியர்

மீசாலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாவும் கொண்ட சிவநாதன் சிவநேசன் அவர்கள் நேற்று (15.08.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் சிவநாதன் - காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரபல ஜோதிடர் மாதோவா - இந்திரா தம்பதியரின் அன்பு மருமகனும், மகாராஜி (களு/ ஜீலான் மத்திய கல்லூரி ஆசிரியை) யின் பாசமிகு கணவரும், சிவஜெயன் (பயிலுனர் மக்கள் வங்கி பம்பலபிட்டி கிளை), சிவமயூராஜினி (கொ/ சைவமங்கையர் வித்தியாலயம் மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவமங்கை (உதவி அதிபர் கொ/ விவேகானந்தா கல்லூரி), சிவரூபன் (விரிவுரையாளர் பப்புவா நியூகினி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவனருட்செல்வன் (ஆசிரியர் களு/ ஜீலான் மத்திய கல்லூரி), செந்தமிழ்அரசி (விரிவுரையாளர் பப்புவா நியூகினி) ஆகியோரின் மைத்துனரும், சிவஹர்சினி (மாணவி கொ/ சைவ மங்கையர் வித்தியாலயம்), சிவானுஜன், சிவாஸ்கரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை நன்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 03.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கெணடி ஒழுங்கை,
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 881 5199 Wife
071 758 5789 Son

# அமெரிக்கப் போர்க்கப்பல் இலங்கையில் நங்கூரம்!

கொழும்பு, ஓக. 16

அமெரிக்க கடற்படையின் சாண்டா பார்பரா என்னும் போர்க் கப்பல் இலங்கையில் இன்று நங்கூரமிடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு பசுபிக் மற்றும் இந்தியப் பெருங் கடலில் இந்தக் கப்பல் இயங்கி வருகின்றது. இந்த நிலையில், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அந்தக் கப்பல் இலங்கையில் நங்கூரமிடவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தோபசிபிக் பிராந்தியத்தில் தனது பணியைத் தொடருவதற்கு முன்னர் எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக அந்தக் கப்பல் இலங்கையில் நங்கூரமிடவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-சீ)

# மாடுகளைத் திருடியவர் மக்களால் நையப்புடைப்பு!

## நால்வர் தப்பியோட்டம் வேலணையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.16

வேலணைப் பிரதேசத்தில் கால்நடைப்பண்ணையாளர் களின் வளர்ப்புக் கால்நடைகளைத் திருடி இறைச்சியாக்கி யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற இடங்களுக்குச் சட்டவிரோதமானமுறையில் கொண்டுசென்று விற்பனை செய்து வந்த திருட்டுக் கும்பலொன்றில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வேலணை வங்களாவடியில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வேலணைப் பிரதேசத்தில் அண்மைக்காலமாகப் பெறுமதிமிக்க வளர்ப்புக் கால்நடைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையில் பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித்துவந்தனர்.

இதையடுத்து பொதுமக்கள் தமது கால்நடைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேலணைக்குவரும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் கண்காணிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துவந்தனர்.

இந்தநிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை பட்டா ரக வாகனம் ஒன்றில் 5 பேரடங்கிய கும்பலொன்று வங்களாவடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அவதானித்த மக்கள் குறித்த நபர்களைப் பிடிக்க முயன்ற போது அவர்கள் தப்பியோட முயன்றுள்ளனர். இதன்போது மக்கள், பட்டா ரக வாகனத்தை மறித்து அதில் இருந்த ஒருவரை இறைச்சியாக்கப்பட்ட மாட்டுடன் பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஏனைய நால்வர் தப்பியோடிய நிலையில் அவர்களைக் கைதுசெய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27,66,20)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் பின்வரும் கால்நடைகள் 03.09.2025 புதன்கிழமை அன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள் :-

| தொடர் இல | அடையாள இலக்கம் | கடா/மறி |
|---|---|---|
| 1 | 4303-0919-0162 | மறி |
| 2 | 4303-0919-0173 | மறி |
| 3 | 4303-0919-0179 | மறி |
| 4 | 4303-0919-0201 | மறி |
| 5 | 4303-0919-0205 | மறி |
| 6 | 4303-0919-0217 | கடா |
| 7 | 4303-0919-0221 | கடா |
| 8 | 4303-0919-0222 | கடா |
| 9 | 4303-0919-0231 | மறி |
| 10 | 4303-0919-0245 | மறி |
| 11 | 4303-0919-0248 | கடா |
| 12 | 4303-0919-0258 | கடா |
| 13 | 4303-0919-0259 | கடா |
| 14 | 4303-0919-0260 | கடா |
| 15 | 4303-0919-0263 | கடா |
| 16 | 4303-0919-0265 | கடா |
| 17 | 4303-0919-0270 | மறி |
| 18 | 4303-0919-0271 | மறி |

மாடுகள் :-

| தொடர் இல | அடையாள இலக்கம் | நாம்பன்/ பசு |
|---|---|---|
| 1 | 4303-0919-0016 | பசு |
| 2 | 4303-0919-0100 | பசு |
| 3 | 4303-0919-0049 | பசு |
| 4 | 4303-0919-0061 | பசு |
| 5 | 4303-0919-0086 | பசு |
| 6 | 4303-0919-0096 | நாம்பன் |
| 7 | 4303-0919-0047 | பசு |
| 8 | 4303-0919-0052 | பசு |
| 9 | 4303-0919-0060 | நாம்பன் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 02.09.2025 (செவ்வாய்க் கிழமை) காலை 10.30 மணிக்கு விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 இனை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்வதுடன் 03.09.2025 அன்று ஏல விற்பனைக்கு வருகை தரும்போது மீளப்பெறக கூடியதாக ரூபா 5000.00 இனை வங்கியில் அல்லது நிதியாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும்.

மக்கள் வங்கிக் கணக்கிலக்க விபரம்:
கண்க்குரிமையாளர்: நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 செலுத்த வேண்டிய கணக்கிலக்கம்: 97000060000276
மீளப்பெறக் கூடிய பதிவுக்கட்டணமாக ரூபா 5000.00 செலுத்த வேண்டிய கணக்கிலக்கம்: 970000440002612
நோக்கம்: ஏலவிற்பனைக்கான விண்ணப்பக் கட்டணம்

ஏலவிற்பனையானது 03.09.2025 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு விவசாய பீடத்தின் ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

பதிவாளர்



# காணவில்லை




கடந்த (11.08.2025) திங்கட்கிழமையில் இருந்து புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் அமைந்துள்ள வீட்டிலிருந்து பொம்மோறியன் இன வகையைச் சேர்ந்த Brown நிறமுடைய நாய் ஒன்று காணவில்லை. அதனை கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

070 767 3641


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
01 . 12 . 1949

விண்ணில்
28 . 07 . 2024

### பழனிப்பிள்ளை சிவன்செயல்

கந்தரோடை மண்ணின் மணி
விளக்கொளியாய் திகழ்ந்தீரே
ஓராண்டு ஓடியும் - எம் மாறா மனது யரோடு
உம் நினைவோடு விழியோடு நீரோடு
வழிகடந்து செல்கிறோம். நீர்காட்டிய வழியோடு
உன் வழியில் செல்கிறோம் கண்ணீருடன்
பலவாழ்க்கைக்கு விளக்கொளியாய்
விளக்கின்றி இருளோடு வின்ணோடு
ஒரு பிளையோடும் விடிவெள்ளியாய்
வழியாட்ட இன்னுயிர் துறந்து
இறையோடு கலந்த எமக்கு
கண்ணீர் மலர்தூவி
அஞ்சலிக்கும் இந்நாளில்...

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்

(CR 45830) A


# வீட்டுத்திட்டக் காணிகளுக்கு உறுதிகளை வழங்குங்கள்

## கரந்தாய் கிராமமக்கள் கோரிக்கை!

இந்தியா - இலங்கை அரசின் இணைந்த திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காணியுடன்கூடிய வீட்டுத்திட்டத்தின் உறுதிகளை வழங்கவேண்டும் என பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிக்குட்பட்ட கரந்தாய் கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ரவிச்சந்திரன் சுதர்ஷினி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2010ஆம் ஆண்டில் இந்தியா - இலங்கை அரசின் இணைந்தத் திட்டத்தின் கீழ் எமக்குக் காணிகள் வழங்கப்பட்டன. எம்முடன், காணிகள் வழங்கப்பட்ட ஏனைய அனைத்துக் கிராமங்களிலும் காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் எமது கிராமத்தில் இன்னமும் உறுதிகள் வழங்கப்படவில்லை.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு உறுதிகளைப் பெற்றுக்கொள்ள கட்டணம் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தது. இது தொடர்பாக முந்தைய அரசிடமும் தெரியப்படுத்தியிருந்தோம்; பெரும்பாலும் நாங்கள் அனைவரும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் என்பதால் பணத்தைச் செலுத்துவதற்கான வசதி எம்மிடம் இல்லை. இதை நாங்கள் தெரியப்படுத்தியிருந்தோம். இந்தக் காணிகள் எங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை: எனவே எமக்குக் காணி உறுதியை இலவசமாக வழங்கவேண்டும்- என்றார். (ச-20)


## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட்கு பெண் பணியாளர்கள் தேவை.

- Administration
- Computer Billing & cashier
- Sales Assistant

வயது எல்லை 18 - 40
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

077 419 5209, 077 419 5218



## மரண அறிவித்தல்



பிறப்பு
10 . 11 . 1944

இறப்பு
12 . 08 . 2025

### மனோன்மணி இரத்தினசிங்கம்

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி இரத்தினசிங்கம் அவர்கள் (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - இராசமணி (தாவடி) தம்பதியரின் மகளும், துரைராசா இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், சிவரூபன், சிவறஞ்சன், சிவறஞ்சினி, சிவரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் பாலசுப்ரமணியம், நடராசா, பரமநாதன் ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீபங்கஜா, கவிதா, சுகந்தன், சுரேஸ்குமார் ஆகியோரின் மாமியாரும், சௌமியா, வருண், அஸ்வின், அனிஸ், அம்ருதா, அதீஸ், சிந்தியா, திவ்யா, ஆரவி, திவ்வியா, டிலக்சன், நிலானி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது தாவடி இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: சிவறஞ்சன்
+614 3118 3743

தகவல்:

(CS 59120) E



## யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)
## இல 52 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குழி யாழ்ப்பாணம்
## பதவி வெற்றிடம் (வெளிவாரி)

எமது சமாசத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1.பதவி :- அச்சு இயந்திர இயக்குனர் (ஓவ்செற்)
குறியீட்டு இல :- 328/14
சம்பள அளவுத்திட்டம் :- 32900.00-355x10-365x10-40100.00
(சுற்று நிரூபம் 02/2025இன் படி)
வெற்றிடம் :- 01

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டறவு ஊழியர் கணிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ஆம் தர கல்விச்சான்றிதலுடன் 02 வருட அச்சியந்திர வேலை தொடர்பான அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

வயது :- 18- 45

ஏனைய விடயங்கள் -

1. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும், மற்றும் படிகள் வழங்கப்படும்.
3. தகமைச் சான்றிதழ்களின் பிரதி விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
4. தகமையற்ற, சரியாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்
5. விண்ணப்ப முடிவுத் திகதி - 31.08.2025

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சமாச் அலுவலக நேரத்தில் விண்ணப்பபடிவங்களை ரூ 50.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பொதுமுகாமையாளர் யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து),இல 52 சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டுக்குழி யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடிவுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சி. சுதர்சன்
தலைவர்

திகதி: 14.08.2025

தொலை பேசி இல : 021 222 5072


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





49ஆவது தேசிய விளையாட்டு விழாவில் கடினப்பந்தில் மூன்றாம் இடத்தைப்பெற்று வடமாகாண அணியில் இடம்பிடித்த கிளிநொச்சி தருமபுரம் இளந்தாரகை விளையாட்டுக் கழகத்தின் மூன்று வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு தருமபுரம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இராமன் சுதாகர், நாகலிங்கம் ஜதுர்சன், பத்மநாதன் துசாந்தன் ஆகியோரே கௌரவிக்கப்பட்டனர். (ஏ-41-113)



சென்னை வானிலை ஆய்வுமையத்தின் ஓய்வுநிலை இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கடந்த புதன்கிழமை யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு வானிலை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக விரிவுரை வழங்கினார். தனிப்பட்ட பயணமாக யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்துறையின் அழைப்பின்பேரில் மாணவர்களுக்கு விரிவுரைகளை வழங்கியுள்ளார். (ஏ-41-66)




யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் இந்தியத் துணைத்தூதரக அணிகள் இடையே சினேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி ஆகியோர் போட்டியை வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்தனர். தேசிய விளையாட்டுத் தினத்தை முன்னிட்டு இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஏ-25,20)



கிளிநொச்சி மாவட்டச் செயலராக சுப்பிரமணியம் முரளிதரன் தனது கடமைகளை அண்மையில் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார். கிளிநொச்சி மாவட்ட பதில் செயலராகக் கடமையாற்றிய அவர் கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலராக நியமிக்கப்பட் டுள்ளார். (ச-113)





முல்லைத்தீவு முள்ளியவளை கமநலசேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளத்தின் வாய்க்கால் சீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குஞ்சுக்குளம் வாய்க்கால் சீரமைப்புக்காக 5 மில்லியன் ரூபா நிதி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் ஒதுக்கப்பட்டு சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சீரமைப்பு நடவடிக்கைகளை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார். (ஏ-25,246)



தென்மராட்சி மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு நாள் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ஏ-41-66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மடுமாதாவின்...

வரலாற்றுச் சிறப்புமிக்க மடுத் திருத்தலத்தின் திருவிழா, பல்லாயிரம் மக்களின் பங்கேற்புடன் நேற்றுப் பக்திபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.
மன்னார் மறைமாவட்ட ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில், காலி மறைமாவட்ட ஆயர் றேமன்ட் விக்கிரமசிங்க, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்றாடி ஆண்டகை, இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் வைமன்ட் குரூஸ் ஆண்டகை மற்றும் மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை ஆகியோர் இணைந்து பெருவிழாக் கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.
பல்லாயிரக்கணக்கான மக்கள் திருவிழாத் திருப்பலியில் கலந்துகொண்டனர். (அ-ம-60)

## ஆட்சியைக்...

தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.
எதிரணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:-
பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் எதிரணிகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சி மட்டுமே. அதில் அரசியல் சூழ்ச்சியென்று எதுவும் இல்லை. எதிரணிகளை பொதுமேடையில் இணைப்பதற்கான அந்த முயற்சி தொடர்பில் விரைவில் எதிர்க்கட்சித் தலைவருடனும் கலந்துரையாடல் நடத்தவுள்ளோம்.
ஆட்சியைக் கவிழ்ப்பதற்குச் சூழ்ச்சி இடம்பெறுகின்றது என்று ஜனாதிபதி அநுர குற்றஞ்சாட்டியுள்ளார். நாம் அவ்வாறு சூழ்ச்சி செய்யவில்லை. இந்த அரசாங்கம் ஐந்து வருடங்கள் இருக்கவேண்டும். அதன்பின்னர் தேர்தல் நடத்தி மக்கள் ஆணை வழங்கினால் பதவியில் மீண்டும் இருக்கலாம். தேர்தல் மூலம் மாத்திரமே நாம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முற்படுவோம்' - என்றார். (அ-ம-44)

## புலிகளின்...

முல்லைத்தீவு-முத்துஐயன்கட்டுஇராணுவ முகாமுக்குள் வைத்து தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர் என்றும், இராணுவத்தின் தாக்குதலால் தான் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, 'வடக்கின் பாதுகாப்பைக் குறைக்கக்கூடாது' என்று பொன்சேகா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புலிகளின் மனோநிலையில் உள்ளவர்கள் வடக்கு - கிழக்கில் இன்னும் உள்ளனர். புலிகளுக்கு ஆதரவு வழங்கிய அரசியல்வாதிகள் உள்ளனர். இன்னும் புலிகளை தலையில் வைத்து ஆடும் புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஆயுதக்குழுக்கள் உள்ளன. இந்தியாவில் இருந்து கடல் வழியாக கஞ்சா வருகிறது.
ஆனையிறவில் உள்ள பாதுகாப்புத் தடையை நீக்கினால் தெற்கிலுள்ள பாதாளக் குழுக்கள் வடக்கில் போய் மறைந்திருக்கமுடியும். தெற்கைப் போன்று அங்கும் அட்டகாசம் புரியமுடியும். ஆயுத வியாபாரம் எல்லாம் அங்கு மிக இலகுவாக இடம்பெறும். வடக்கில் பாதுகாப்பு அரண்கள் இருக்கக்கூடாது, இராணுவ முகாம்கள் இருக்கக்கூடாது என்று அரசியல்வாதிகள் கூறுவது அவர்கள் அரசியல் இலாபம் அடைவதற்காகவே. எனவே, அத்தகையவர்களின் கருத்துகளை கணக்கில் எடுக்கக்கூடாது.
வடக்கில் இராணுவ முகாம் இருப்பதை மக்கள் விரும்புகிறார்கள். வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் இராணுவம் பலமாக இருக்கவேண்டும். இங்கிலாந்தில் உள்ள நிலைமையோ சிங்கப்பூரில் உள்ள நிலைமையோ இந்த நாட்டில் இல்லை. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (அ-ம-75)

## இராணுவ...

பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நகரசபை தவிசாளர் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தப் போராட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இதனடிப்படையில் பருத்தித்துறை துறைமுகப் பகுதி மற்றும் வெளிச்ச வீட்டடியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி பொது அமைப்புகளை ஒன்றிணைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.
பருத்தித்துறை நீதிமன்றத்துக்குச் சொந்தமான நிலம் மற்றும் தபால் நிலையத்துக்குச் சொந்தமான கட்டடம் என்பவற்றை ஆக்கிரமித்து பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் பெரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், தபால் நிலையம் பிறிதொரு கட்டிடத்தில் இயங்கி வருவதுடன் பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை பருத்தித்துறை நகருக்கு வெளியே இடம்மாற்றுவதற்கு முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன.
இதனால், பருத்தித்துறை நகரின் முக்கியமான அடையாளங்களான நீதிமன்றம், தபால் நிலையம், வெளிச்சவீடு ஆகியவற்றை அந்த அந்த இடங்களிலேயே உறுதிப்படுத்தும் வகையிலும், குறித்த பகுதிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ, கடற்படை முகாம்களை அகற்றுமாறு கோரியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-100)

## சர்வதேச...

உதயனின் ஊடக அனுசரணையில், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில், 'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா' இடம்பெற்றுவருகின்றது.
யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில், கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேகப் பகுதியில் இந்தப் புத்தகத் திருவிழா நேற்றுக் காலை ஆரம்பித்தது. பெருமளவான மக்களும், மாணவர்களும் மிகவும் ஆர்வத்துடன் இந்தப் புத்தகத் திருவிழாவில் கலந்துகொண்டனர். 'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா' இன்றும், நாளையும் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளநிலையில், ஆர்வலர்களைக்கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## குடும்பத்...

பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நல்லூர் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து வருகைதந்து யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் தங்கியிருந்தபோதே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கிணற்றுக்குள்...

மீட்கப்பட்டுள்ளார். கிணற்றுக்குள்ளிருந்து துர்நாற்றம் வீசியதைத் தொடர்ந்து, அதற்குள் சடலமொன்று இருப்பதை பொதுமக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு சடலத்தை மீட்டனர். (அ-ம-25-9)

## அரகலய...

தற்போது பதவி வகித்தாலும் அரகலய தொடர்பில் எனக்கும் ஆறு வழக்குகள் உள்ளன. அவற்றை எதிர்கொண்டுவருகின்றேன். மக்கள் போராட்டத்தை நாம் ஏற்கின்றோம். எனவே, சட்டத்தின் பிரகாரம், உரிய நடைமுறைகளுக்கமைய வழக்குகளை நீக்கிக்கொள்ளவேண்டும்.
அரகலய தொடர்பில் நாடு பூராகவும் 3 ஆயிரம் வரையிலான வழக்குகள் உள்ளன. அவை தொடர்பில் மீள விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம், நீதி அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இதுபற்றிப் பேசப்பட்டுவருகின்றது.
சில வழக்குகள் அரகலயவுடன் நேரடியாகத் தொடர்புபட்டவை. மேலும் சில வழக்குகள் அரகலய எனக் கூறப்பட்டாலும் அதன் பின்னணியில் வெவ்வேறு சம்பவங்கள் உள்ளன. வீடு எரிப்பு இடம்பெற்றுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இவற்றை புறந்தள்ளிவிட முடியாது. இவ்வாறு பல வழக்குகள் ஒன்றாக இருப்பதால் அவற்றை வகைப்படுத்தவேண்டும். அதன்பின்னர் சட்டபூர்வமாக நீதி நிலைநாட்டப்படும். இது தொடர்பில் எமது விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழி உரிய வகையில் நிறைவேற்றப்படும் - என்றார். (அ-ம-44)

## முன்னாள்...

காலமானார். முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தயின் மகனான லொகான் ரத்வத்த, 2000ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றம் சென்றார்.
பல ஆண்டுகளாக, சிறைச்சாலை மேலாண்மை மற்றும் கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் மற்றும் இரத்தினக்கல் மற்றும் நகைகள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட பல பதவிகளை வகித்தார்.
இலங்கை அரசியல் களத்தில் ஒரு முக்கியமான நபராகவும் அவர் இருந்தார், இலங்கை சுதந்திரக் கட்சியுடனும் பின்னர் இலங்கை பொதுஜன பெரமுனவுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததற்காக அறியப்பட்டார்.
கடந்த 2001ஆம் ஆண்டு உடதலவின்ன பகுதியில் முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் லொகான் மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அத்துடன், சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியற்கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியதுடன், இன்னும் பல சர்ச்சைகளுடன் தொடர்புடைய நபராக ரத்வத்த இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## விசேட...

தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் தற்போது சிறப்பாக இடம்பெற்றுவரும் நிலையில், எதிர்வரும் வாரம் விசேட உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. இதனால், ஆலயத்துக்கு வருகைதருவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.
திருட்டுகள் மற்றும் குற்றச்செயல்கள் ஆலயச் சூழலில் இடம்பெறாது தடுப்பதற்காக ஆலயச் சூழலில் சிவில் மற்றும் சீருடையுடன் 600 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் திருட்டுக் கும்பல்கள் நல்லூர் ஆலயத் திருவிழாவுக்குள் ஊடுருவியுள்ளன என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே, இவ்வாறான பல்வேறு விடயங்களைக் கருத்திற்கொண்டு கொழும்பிலிருந்து விசேட படையணியை வரவழைத்துள்ளோம்.
எனவே, ஆலயச் சூழலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருப்பதுடன், சந்தேகநபர்கள் தொடர்பான தகவல்களை சீருடையில் கடமையிலிருக்கும் பொலிஸாருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தவேண்டும் - என்றார். (அ-ம-66)

## சத்திரசிகிச்சை...

மருத்துவர் வெங்கடாசலம் சுதர்சன் (வயது-49) நேற்றுக் காலமானார்.
கொழும்பு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கருத்துரை வழங்குவதற்காகச் சென்றவேளை அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. சிறிது நேரத்திலேயே நெஞ்சைப் பிடித்தபடி மயங்கி வீழ்ந்த நிலையில், முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், அவர் முன்னரேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாரடைப்புக் காரணமாகவே இறப்புச் சம்பவித்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. மிகவும்சிக்கலுடைய நூற்றுக்கும் மேற்பட்ட அறுவைச்சிகிச்சைகளை மருத்துவர் சுதர்சன் வெற்றிகரமாக மேற்கொண்ட பெருமைக்குரியவர்.
அவரின் மறைவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும், மருத்துவக் குழுமத்துக்கும் பேரிழப்பு என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (அ-ம)

## புங்குடுதீவுப்...

நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் படுகொலையைக் கண்டித்தும், உயிரிழந்தவருக்கு நீதிகோரியும், யாழ்ப்பாணம் - புங்குடுதீவு இடையிலான தனியார் பேருந்துச் சேவையினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன் ஓர் அங்கமாக கவனவீர்ப்புப் போராட்டத்தையும் நடத்தினார்கள்.
படுகொலைகளுடன் தொடர்புடைய நபர்கள் விரைவாகக் கண்டறியப்பட்டு, அவர்கள் நீதியின் முன்னால் நிறுத்தப்படவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புடின் - ட்ரம்ப் இடையே நேற்று நேரடிப் பேச்சு!

## கைப்பற்றிய பகுதிகளைத் தந்தால் போர் நிறுத்தம்
## உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் புடின் 'ஸ்கெட்ச்'

**வொஷிங்டன், ஓகஸ்ட் 17**

**உக்ரைனிடம் இருந்து ரஷ்யா கைப்பற்றியுள்ள ஷபோரியா உள்ளிட்ட பகுதிகளை ஒப்படைத்தால் போர் நிறுத்தம் உடனடியாக நடைமுறைக்கு வரும் என்று ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.**




உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தையில் ரஷ்ய அதிபர் புடினும், அமெரிக்க அதிபர் ட்ரம்பும் நேற்று ஈடுபட்டனர். அலாஸ்காவில் வரலாறு காணாத பாதுகாப்புக்கு மத்தியில் இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதன்போதே, உக்ரைனின் அணுவுலை அமைந்துள்ள ஷபோரியா உள்ளிட்ட எல்லைப் பகுதிகளை ரஷ்யாவிடம் ஒப்படைக்குமாறு புடின் கோரியுள்ளார்.

நிலங்களை விட்டுக்கொடுத்து அமைதியை எட்டுவதே இந்தப் பேச்சுவார்த்தையின் பிரதான நோக்கம் என்று ட்ரம்ப் ஏற்கனவே தெரிவித்திருந்தார். எனினும், புடினின் 'அதீத' கோரிக்கைக்கு அவர் சம்மதிக்கவில்லை என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தகைய முடிவு போர் நிறுத்தத்தைக் கொண்டுவராது. உக்ரைன் இதற்கு இணங்காது என்று ட்ரம்ப் தெரிவித்தார் எனக் கூறப்படுகின் றது.

லூகான்ஸ், டொனாஸ்க், ஹேர்சன் ஆகிய எல்லைப் பிராந்தியங்கள் ரஷ்யாவால் ஏற்கனவே கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டால், அது கருங்கடலில் ரஷ்யாவின் பாதுகாப்பைப் பலப்படுத்தி, அதை அசுர பலமாக மாற்றும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். (ம)

# ஏழாலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஓக. 16

ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினர் மற்றும் கலாநிதி சனசமூக நிலைய நிர்வாகம் ஆகியன இணைந்து கடந்த மே மாதம் மின்னல் தாக்கி உயிரிழந்த, அமைப்பின் உறுப்பினர் குணரத்தினம் குமரனின் நினைவாக நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஏழாலைச் சந்தியில் அமைந்துள்ள ஏழாலை வடக்கு- கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்களை பங்கேற்று உயிர்காக்கும் பணிக்குப் பங்களிப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

# ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச்செய்யாதீர்

*சீலரத்ன தேரர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.16

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரி மைகள் இரத்துச்செய்யப்படக்கூடாது என்று ஜனசெத பெரமுனக் கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பதவியில் இருக்கும்போதுதான் அனைவரும் வருவார்கள், அதிகாரம் இல்லையேல் எவரும் வரமாட்டார்கள். எனவே, சிறப்புரி மைகளை இரத்துச்செய்தால் எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கும் இந்நிலை தான் ஏற்படும் எனவும் சீலரத்ன தேரர் குறிப்பிட்டார். (ச-44)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு ரூ.631 மில்லியன் வருமானம் இழப்பு

கொழும்பு, ஓக.16

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பயிற்சி அளிக்காமல் 28 ஆயிரத்து 165 வீட்டுப் பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய தன்மூலம், 631,177,650 ரூபா பயிற்சி வருமானத்தை இழந்துள்ளது என்று நாடாளுமன்ற பொதுநிறுவனங்கள் குழுவில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விடயம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயற்திறன் குறித்த விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்கு துணைக்குழுவொன்றை நியமிக்குமாறு கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர பரிந்துரைத்துள்ளார். (ச-இ)

**வேலையாட்கள் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் கல் அரிவு யாட் ஒன்றிட்கு மெசின் கல்லு அரியும் வேலையாள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு: 077 9400 963

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் சந்தியில் இருந்து 300 m தூரத்தில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
இரண்டு பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும்.
(12 அடி பாதையுடன்)
பார்வை நேரம் காலை 08.00 - 06.00 மாலை
தொடர்பு: 077 505 8561
077 352 5157

**காணி விற்பனைக்கு**

புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவை, பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் நல்ல செம்மண் வளம் உள்ள 2 பரப்பு, 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும், பண்ணை அமைப்பதற்கும் ஏற்றது.
தொடர்பு: 077 129 8159

**காணி விற்பனைக்கு**

ஆறுகால்மடம் பழம் வீதியில் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 822 1898, 077 061 3216

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 076 632 3554

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org